பட்டிருக்கிறது. ஆனால் இங்கே போடுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பொதுவாக போட்டிருக்கிறார்களே தவிர பெயர்கள் போடாமல் இல்லை. அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அரசாங்க விழா எங்கிருந்தாலும் எம். எல். ஏ. க்கள், எம். பி. க்கள் பெயர்கள் அவசியம் போட வேண்டுமென்று சி. எம். உத்தரவு இட்டிருக்கிறார்கள். அதை சி. எம். சொல்லச் சொன்னார்கள். அதை இங்கே சொல்லிவிடுகிறேன். உங்களுக்கு நான் ஒன்று தெரிவித்துக்கொள்வேன். நான் ஒரு சமயம் இங்கே சென்னையில் இல்லாதபோது ஒரு அரசாங்க நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் பெயர் அழைப்பிதழில் போடவில்லை. அந்தச் சட்டமன்ற உறுப்பினர் நேரடியாக என் நேர்முக உதவியாளரிடத்தில் பேசுகிறபோது என் நேர்முக உதவியாளர் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் சொல்லி அவர் பெயரைப் போட்டுத்தான் அழைப்பிதழ் வெளியிடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் எங்கள் கொள்கை என்ன என்பது நன்கு தெரியவரும். நான் இல்லாதபோது கூட என் நேர்முக உதவியாளரிடம் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொலைபேசியில் பேசியபிறகு இங்கே எனக்கு முன்னால் இருக்கிறார்கள் அந்த திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் — அவர்கள் பேசிய உடனே அடிக்கப்பட்ட அழைப்பிதழ்களை கீழே வைத்து விட்டு புதிதாக அடித்துப் போடவேண்டும் என்று என் நேர்முக உதவியாளர் சொல்கிற அளவிற்கு இருந்தால் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது இதிலிருந்து நன்றாகத் தெரியும்.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: திருவாரூர், நன்னிலம் குற்றாலம் தொகுதியைச் சார்ந்த கொடவாசலை தாலுகாவாக ஆக்கிய இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்து ரெவின்யூ பிர்க்காக்கள் கொண்ட நன்னிலத்திலிருந்து நான்கு ரெவின்யூ பிர்க்காக்கள் கொடவாசல் தாலுகாவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கொடவாசல் துணை வட்ட அலுவலகம் இருந்தது. அது தற்போது நன்னிலத்தைச் சேர்ந்த திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தின் தலைநகரம். அங்கே துணை வட்டாட்சியர் அலுவலகம் திறக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது எந்தத் துணை வட்டங்களை வட்டங்களாக்கினாலும் அதற்கு உத்தரவு போடுகிறபோது ஒருங்கிணைந்த உத்தரவாக, காம்ப்ரிஹன்ஸிவ் ஜீ. ஓ. ஆகத்தான் இப்போது போடப்படுகிறது. எல்லா விதமான ஏற்பாடுகளையும் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொப்பூருக்கு அருகில் தொப்பை ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணை

* வினா எண். 75 — திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தர்மபுரி தொகுதி தொப்பூருக்கு அருகில் தொப்பை ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணையினால் தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. கே. இராஜ முகமது: (அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்தில் 2,050 ஏக்கரும், சேலம் மாவட்டத்தில் 3,280 ஏக்கரும் பாசன வசதி பெறும்.

குப்பநத்தம் அருகே செய்யாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண். 76—திரு. தா. கு. மிக்கண்ணு: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம் செங்கம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள குப்பநத்தம் என்னுமிடத்தில் செய்யாற்றின் குறுக்கே அணை கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை?

(இ) அணை கட்டும் பணிகள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜமுகமது: (அ), (ஆ) மற்றும் (இ) செய்யாற்றின் குறுக்கே பாலாறு வடிநிலத்தில் உள்ள குப்பநத்தம் அணைத்திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) பரிசீலனையில் உள்ளது. தற்போது பாலாற்றிலும், செய்யாற்றிலும் பல இடங்களில் டிசம்பர் 78 முதல் நடந்து வரும் நீர் அளவைப் பணிகள் மொத்தம் 5 ஆண்டுகள் நடத்தப்பட வேண்டும். இப்பணிகள் இவ்வடிநிலத்தில் உபரி நீர் உள்ளது என்று தெரிந்தால் இந்தத் திட்டம் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாற்றின் அருகே குப்பநத்தம் அணைக்கட்டுத் திட்டம் அரசின் ஆய்விலே இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி அந்த அணைக்கட்டு கட்டும்போது, தண்டரை அணைக்கட்டிற்கான அந்த பாசன ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் இருக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, குப்பநத்தம் அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்ள முடியுமா என்பதே 1983 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் தெரியும். அப்போதுதான் எவ்வளவு உபரி நீர் கிடைக்கும் என்பது தெரியும். அப்படி உபரி நீர் இருந்தாலும், ஏற்கனவே இருக்கின்ற ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதைக